செ.வெ.எண்: 23 நாள்: 11.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் சிறப்பு முகாம்களை வாக்காளர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (11-9-2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி 1.1.2017 தேதியினை அடிப்படையாக கொண்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்வது தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் 01.09.2016 அன்று வெளியிட அறிவுறுத்தப்பட்டு அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் உரிய சிறப்பு சுருக்கத்திருத்தம் 2017-க்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன் விபரம் அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.



இந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு குறித்து கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து அரசியல் கட்சி முகவர்களுடன் அனைத்து வாக்குச்சாவடிகளிலும்

யு

இன்று (11.09.2016) மற்றும் 25.09.2016 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு முகாம் நடத்த இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று (11-9-2016) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளும் வகையில் சிறப்பு முகாம் நடைபெற்று வரும் 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை அரசினர் கலைக்கல்லூரி, இராஜகோபாலபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கவிநாடு கிழக்கு ஊராட்சி, ஆட்டாங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய வாக்குப்பதிவு மையங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் வாக்காளர்களிடமிருந்து 18 வயது நிரம்பியவர்கள் புதிதாக வாக்காளர்களாக பெயர் சேர்க்க படிவம் 6, வெளிநாட்டில் வசிக்கும் இந்திய குடிமக்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏ, ஒரு சட்டமன்ற தொகுதிக்குள் வசிப்பிடம் மாறியிருந்தால் படிவம் 8ஏ, பெயரை நீக்க படிவம் 7, பெயர் வயது, பாலினம், உறவுமுறை முதலிய பதிவுகளில் திருத்தம் அல்லது சரியான உருவப்படம் இடம்பெறச் செய்ய படிவம் 8 ஆகிய பல்வேறு படிவங்கள் வரப்பெற்ற எண்ணிக்கைகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் வாக்காளர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து வாங்குவதுடன் வாக்குச்சாவடி அரசியல் கட்சி முகவர்களின் கோரிக்கைகளை உரிய முறையில் கேட்டறிந்து சரிசெய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கவிநாடு கிழக்கு ஊராட்சி ஆட்டாங்குடியில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் செயல்படும் நியாயவிலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட பொருட்களின் விபரம், பொருட்களின் தரம் மற்றும் எடை, பொருள் இருப்புப்பதிவேடு மற்றும் விநியோகப்பதிவேடு போன்ற பல்வேறு தகவல்களை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், புதுக்கோட்டை அரசினர் கலை அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவினை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை வட்டாட்சியர் திரு.செந்தமிழ்குமார், துணை வட்டாட்சியர் திரு.முருகப்பன், வருவாய் ஆய்வாளர் திரு.சிவாஜிராஜன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:  செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**